**வேலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு**

**பிறப்பிப்பவர்: திரு. இரா. லெட்சுமணன், பி.இ.,**

**ந.க.எண்.1518/2024/எப்1/மஅ.1** **நாள் : 08.12.2025**

**பொருள்:** வேலூர் மாநகராட்சி – மண்டலம்-1 - குடியிருப்பு மனைப்பிரிவு –காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர் கிராமம் சர்வே எண்.48/5எ, 6எ, 6பி மற்றும் 7பி – 1.095 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு தொழில்நுட்ப அனுமதி அளித்து – ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. உறுப்பினர் செயலர், வேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் உத்திரவு VLR/CFVH94OT/72/2024/TCP, நாள்:06.06.2024
2. உறுப்பினர் செயலர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடம் ம.வ/ மா.வ.ஊ.அ(வே.உ.தி.கு)எண்: 22/2024
3. மனுதாரரால் மாநகராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் சலான்கள் நாள்: 26.03.2025, 16.05.2025, 16.05.2025, 16.05.2025 மற்றும் 16.05.2025
4. வேலூர் மாமன்ற தீர்மான எண்:224 நாள்:26.09.2025
5. ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அனுமதி நாள்:05.12.2025

.........

**ஆணை:**

வேலூர் மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர் கிராமம் சர்வே எண். 48/5எ, 6எ, 6பி மற்றும் 7பி –ல் - 1.095 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், வேலூர் அவர்களின் உத்திரவு கடிதம் VLR/CFVH94OT/72/2024/TCP, நாள்:06.06.2024ன் படியும் வரைபடம் எண். ம.வ/ மா.ந.ஊ.அ(வே.உ.தி.கு) எண்:22/2024ன் படி பார்வை -1 மற்றும் 2-ல் கண்டுள்ளவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு மனைப்பிரிவு உரிமையாளர் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் மூலை முடுக்கு, பொது உபயோகம் இடம் ஆகியவைகளை ஆவண எண்:4691/2024 நாள்:28.05.2024-ன் புல்வெளி பயன்பாட்டில் உள்ள பொது இடங்கள் ஆகியவை ஆவண எண்: 4691/2024 நாள்:28.05.2024-ன் படி வேலூர் மாநகராட்சி ஆணையாளர் பெயரில் பத்திரபதிவு செய்து அதன் ஆவணங்களை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள அடிப்படை வசதிகளான சாலை வசதி, மழைநீர் கால்வாய் அமைத்து அதற்கு மூன்றாம் நபர் பரிசோதனை சான்று பெற்று 17.02.2025ல் சமர்ப்பித்துள்ளார்.

பார்வை-4ல் கண்டுள்ள மாமன்ற தீர்மான எண்:224, நாள்: 26.09.2025-ன்படி மாமன்றம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு மனைபிரிவில் வேலூர் மாநகராட்சி மூலம் பாதாள சாக்கடை அமைத்திட வைப்புத் தொகை இரசீது எண்.035/101/1/24-25/0022027, நாள்:26.03.2025ல் பொறியியல் பிரிவு மூலம் 5,91,973 மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் மண்டலம்-1 வருவாய் பிரிவு மூலம் 19 மனைப்பிரிவுகளுக்கு 15.11.2025 அன்று காலிமனை வரிவிதிப்பு செலுத்தி இரசீது நகல் இணைத்துள்ளார். மேற்கண்ட அனைத்து விதமான கட்டணங்களையும் மனுதாரர் உரிய சலான்கள் மூலம் மாநகராட்சிக்கு செலுத்தியுள்ளதன்படி பார்வை-1 மற்றும் 2-ல் காணும் உறுப்பினர் செயலர், உள்ளூர்திட்டக் குழுமம், வேலூர் அவர்கள் அளித்துள்ள தொழில்நுட்ப அனுமதி, பார்வை 4ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தின்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நகர திட்டமிடுநர்
வேலூர் மாநகராட்சி.

**பெறுநர்**

1. திரு.M.சுந்தரம் மற்றும்,
   திரு. S.K.முனிரத்தினம்,
   எண்.318 தெற்கு அவென்யூ
   TNHB, Phase-II.சத்துவாச்சாரி,
   வேலூர்-09.
2. வட்டாட்சியர் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   காட்பாடி.
3. சார்பதிவாளர் அவர்கள்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   காட்பாடி.

**நகல்**: ஆணையர் அவர்களின் மேசைக்கு